REGD No. M 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 5-8-51 | இதழ் 6

★ பொறுப்பதற்கில்லை! ★

[அண்ணால்]

..தாட்டு இசுக்காமே—போவேனு
துணியோதனன் தம்பி, ஆவேனு!

* * *

..தாடாதேடா பாவி, துடிக்குதே
என் ஆவி
..டமே செய்யாதே, அடப்போடா!

* * *

விசில் சப்தம்! 'சபாஷ்'— என்ற ..ரவாரம்! இரண்டு 'காஸ்' லைட்டு ..ள்! ஒரு பெரிய திரை! நீற்றுக் ..காட்டகை! திரௌபதியும் துச் ..தனனும், மேடையின் மீது ..டந்து 'தாம், தூம்' என்று குதிப் ..பார்கள்! 'மகாஜனங்களுக்கு' ..டித்த நடிகர்களாயிருந்தால் கேட்க ..வண்டாம்! ரசனை அதிகமாகும். திரௌபதிக்கு-'குஷி' கிளம்பும். தன்னைத் துகிலுரியவந்த, துணியோதனன் (துரியோதனன்!) தம்பி, துச்சாதனனைப் பார்த்து, 'மடையா ..டையா—அட ஓடையா' இப்படி ..யெல்லாம் வாரியிறைப்பாள்! துரத் ..திலே விதூஷகன் நின்று கொண்டி ..ருந்தால், கேட்கவேண்டியதில்லை. ..கனைக்கு!!

* * *

இது 'நாடகமேடை' பத்து பதி ..னைந்து ஆண்டுகட்குமுன். 'திரௌ ..பதி வஸ்திராபஹரணம்' என்பது ..ட்டுமல்ல. அப்போது நடை..

பெற்ற நாடகங்கள் ஒவ்வொன்றும் இப்போது நினைத்தால் — சிரிப்பு அடங்காது!

* * *

ஒரு சமயம் 'ராமாயணம்' நாடகம் நடந்து கொண்டிருந்தது. தசரதன், இராமன் காட்டுக்கேகிவிட்டானென்று கேள்வியுற்றதும் கதறி 'ஐயோ, மகனே!' என்று அழுதார். அந்தச் சோகம் நிரம்பிய கட்டத்தில் வருத்தம் நிரம்பிய விருத்தம் ஒன்றை பாடிவிட்டு சாய்ந்து— செத்துவிட்டார் — இந்தக் காட்சி முடிந்துவிட்டது.

மகாஜனங்களில் ஒருவர் 'ஒன்ஸ் மோர்!' என்று கூவினார். உடனே செத்த தசரதர் மீண்டும் எழுந்தார். பாடினார். பிறகு, அடுத்த முறையாகச் செத்தார்!

* * *

இதுபோலப் பலப்பல, சுவையான சம்பவங்களைக் கேட்கலாம், பழைய நாடகமேடை நடிகர்களிடமிருந்து. விலாநோகச் சிரிக்கவைக்கும் அந்த நிகழ்ச்சிகள் நமது நாடக மேடையின் இறந்தகாலம் எப்படியிருந்தது என்பதையும் தெரிவிக்கும்.

இயற்கைக்குப் பொருந்தாத அந்தக்காலம் இப்போது புதைந்து

விட்டது. புது மறுமலர்ச்சியைக் காண்கிறோம்.

புதுமை! நாளுக்கொரு புதுமை — இன்று நாடக மேடைகளில்! "நான் — விதவையா?" — அழுத கண்ணீரோடு, கேட்கிறாள், சமுதாயத்தால் விரட்டப்பட்ட நங்கை. தனது கண்ணீரைக் காட்டி, உழைக்கும் நான் ஏன் வாழக்கூடாது என்று வாதம் புரிகிறாள் "ஏழை" குடும்பச் சூழலில் தப்பெண்ணம் எவ்வளவு தகராறைக் கிளப்பிற்று என்று எடுத்துச் சொல்கிறது 'குடும்ப வாழ்க்கை'—பலப்பல புது நாடகங்கள்! மனிதனின் அன்றாட வாழ்க்கையில் ஒன்றிய சம்பவங்களைக் குழைத்துத் தீட்டப்பட்ட நாடகங்கள்!

இன்று, அந்த புது மலர்ச்சி தமிழ்க் கலையுலகிலே, மணம் வீசி வருகிறது. பழைமைக்கு மெருகூட்டும் நாடகங்கள் செத்துவிட்டன. நாடகங்களின் கதைகளில் மட்டுமல்ல மறுமலர்ச்சி— அவைகளின் பெயர்கள் — ஆகா! உச்சரிக்கும் போதே என்ன இனிமை! 'முள்ளில் ரோஜா' 'விடியுமா?' 'வானவில்' 'மொக்கு' 'வாழ முடியாதவர்கள்' 'உயிரோவியம்' 'ஒரே முத்தம்' 'சூறாவளி'......

இந்த மறுமலர்ச்சியைக் காணும் போது மகிழாமலிருக்க முடியுமா

'மடையா—கடையா'— இதுபோன்ற வசனங்களும் 'அகோ, வாரும் பிள்ளாய்! என்ற வார்த்தைகளும் படர்ந்து கிடந்த நாடக மேடையில் இன்று நாம் எத்தகைய அழகு வார்த்தைகளைக் கேட்கிறோம். இன்றைய நாடக மேடையில்.

"கருங்கல்லைக் கரைக்க முடியுமா? கட்டாந்தரையில் பயிரிட முடியுமா? கண்ணில்லாதவனுக்கு மண்ணிலுள்ள காட்சிகளைக் காட்ட முடியுமா?"

எவ்வளவு அழகு துள்ளி விளையாடுகிறது, தமிழில்! இதயத்தை மெல்லவோ இழுக்கிறது!

எத்தகைய மாற்றம் மலர்ந்திருக்கிறது! வாழ்வைத் தொடும் இந்த வளர்ச்சிக்கு மக்கள் தரும் ஆதரவு தான் எத்தகைய பூரிப்பைத் தருகிறது! புதுமணம் வீச, பழைமை ஓட, பவனி வரும் தென்றலல்லவா இது என்று மகிழாதார் இல்லை.

சீனமைப்புகளும், 'லைட்' மாற்றங்களும், தந்திரக் காட்சிகளும் இருந்தாலும் 'சம்பூர்ணராமாயணம்' 'கிருஷ்ண லீலா' நடத்தும் கம்பெனிகள்—அல்ல! அல்ல!! ஏதோ ஒரு கம்பெனிதான் — 'மூடுவிழா' தேதியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. எத்தகைய மாற்றம் இது!

மந்தமாருதம் வீச, அதோடு அகிலின் வாசனை கலந்துவர, அந்தி நேரத்தில், ஆற்றங்கரை யோரத்தில் யாழ் ஒன்றை இரு தங்கக் கரங்கள் மீட்ட, அதை ரசிக்கும் பேறு கிடைத்தால்! அத்தகைய இன்பம் நமக்குக் காணக் கிடைக்கிறது, இன்று நடைபெறும் நாடகங்களில். கண்குளிரக் காண்கிறோம்! காதார ரசிக்கிறோம்! புதுமை நம் நரம்பெல்லாம் பாய்ந்தோடி இதயமெல்லாம் நிறைகிறது!

இந்த மாறுதல், கண்டு மகிழ்ச்சி பெற வேண்டியோர்—மருளுகின்றனர். மருள்வதோடு மட்டுமல்ல, அழகுச் சோலைக்குள் நுழைந்த மந்திபோல் ஆட்டம் போடுகின்றனர்! சந்துமுனையிலே நிற்கும் அந்தி நேர மைனருக்கு, எதைக் கண்டாலும் 'சபலம்' வரும்; இளமைக் கோளாறால். இது மன்னிக்கக் கூடியது. ஆனால் எதைக் கண்டாலும் சபலங் கொள்ளும் போக்குள்ளோரென நாம் குறிப்பிடும் நபர்கள், சந்துமுனை மைனர்களல்ல; சர்க்காரின் சூத்ரதாரிகள்!

புதுமை நாடகம் என்றால் சீறுகிறார்கள். 'கொண்டுவா கதையை' என்று உத்திரவு போடுகிறார்கள். 'முன்னதாக அனுமதி பெறவேண்டும்!'—இப்படி ஒருதாக்கீது. 'கதை மட்டும் போதாது—வசனம், பாட்டு எல்லாம் கொண்டுவா!' — இப்படி ஒரு கட்டளை, போலீஸ் அதிகாரி மூலம். இப்படியெல்லாம் தர்பார் செய்கிறார்கள். இன்று ஒவ்வொரு ஊரிலும் நல்ல கருத்துக்கள் உள்ள நாடகங்களை நடத்துவதென்றால், அதற்கு ஏற்படும் அலைச்சலும் தொல்லைகளும் கொஞ்ச நஞ்சமல்ல.

* * *

அண்மையில் திண்டுக்கல்லில் நடைபெற்ற தி. மு. க. எழுத்துரிமை, பேச்சுரிமை மாநாட்டில் 'சந்திரமோகன்' நடைபெறுவதற்கு, நாம் தாண்டிச் செல்ல வேண்டியிருந்த, அதிகார மேடு பள்ளங்கள், ஏராளமானவை. மாநாட்டில் மட்டுமல்ல, தியாகராயர் கல்லூரி நிதிக்காக, அவைகளின் கதைகளை ஒப்புவிக்குமாறு உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர், சர்க்காரின் தூதுவர்கள்.

அவர்கள் பார்த்து, அனுமதித்தால் நான் நாடகம் நடத்த முடியும்!—மறுத்தால் முடியாது.

எவ்வளவு விசித்திரம், இது! 'ஏன்?' என்று கேட்டால், போலீஸ் அதிகாரிகள் மந்திரிகளைக் காட்டுகின்றனர். மந்திரிமார்களுக்கு நாட்டு மக்களுக்கான உணவு முதலிய தேவைகளில் கவனம் செலுத்த முடியாவிட்டாலும், எங்கெங்கே நாடகம் என்று அறியவும், அதை எப்படித் தடுக்கலாம் என்று முயலவும் நேரமிருக்கிறது! நினைப்புமிருக்கிறது!!

அப்படி நாம் நடத்தும் நாடகங்களில் என்ன குற்றத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் இதுவரையில். கூற முடியுமா?

"ஐந்தாம் வேதந்தன்னை அன்னையே கற்றுத் தாரும்!" என்று தாரவின்—காவிரி... ...—பார்

பிலே சாய்ந்த சந்திரனின் கதை
நடத்துகிறோமா? ஒழுக்கத்தி
ஊறு விளைவிக்கிறது என்று கூற

அகல்யாவுடன் உஷத் கா
திலே உல்லாசத்தோடு பொழு
போக்கிய இந்திரனின் 'சே
காதல்' நமது நாடகங்களில் கா
முடியாதே!

அம்மா குளிக்க, அதற்கு
காவல் காத்தான் மகன். அப்பே
தையோ நினைத்துக்கொ
அப்பா வெகு அவசரமாக ஓடி
'முடியாது. அம்மா குளிக்கிறா
என்று தடுக்க, "என்னையா— அ
வும் இப்போதா தடுக்கிறா
என்று அய்யன் பிள்ளையை
கொல்ல...பின்னர் யானைத் தலை
ஒட்டவைத்து உயிர்ப்பிக்கப்ப
வர்தான் பிள்ளையார் என்று
யும் 'கணபதி புராணம்' அல்ல
நமது நாடகம், ஆபாசக் காட்சி
தென்பட!

நாமென்ன ஆணும் ஆணு
காதல் புரிந்து திருமணம் செய்
கொண்டனர் என்று கூறுகிறோம்
விஷ்ணுவும் சிவனும், பெண்ணு
ஆணுமாகி ஐயனாரைப் பெற்றா
என்று சொல்லப்படுகிறதே அ
போல! இல்லையே! கருத்து குரு
காத காட்சிகள்தானே நமது நா
கங்கள்.

இருந்தும் இவைகளை நாம் நட
ஏன் இவ்வளவு தடைகள், தர்ப
அடக்கு முறை?

* * *

நாடகத்தை ஒரு பிரச்சார ப
யாக வைத்துக் கட்சியை வளர்
றார்கள்

இதுபோல, காங்கிரஸ் முகா
அடிக்கடி பேசிக் கொள்வதாகவு
அதன் விளைவாக அதிகார அ

வெளி வந்து விட்டன!

தோழர் கி. மனோகரன் தரும்

சுவை மிக்க நூல்கள்

சுடலையின் நடுவே! ரூ 1

மதுரையில் மனோகரன் அணா 4

விவரங்களுக்கு;—

ஏ. எஸ். சிங், நியூஸ்ஏஜண்ட்

A நாகர் கோவில்

மூலம் நமக்குத் தொல்லைகள் டருவதாகவும், நமக்கு வரும் ந்திகள் கூறுகின்றன. நாம் த மறுக்கவில்லை! நமது கழகக் ள்கைகளைப் புகுத்தநாம் கடைப் க்கும் பல முறைகளில் ஒன்று கத்துறையாக இருக்கலாம். து எப்படித் தவருகும்? செய்யக் ாத காரியமா? அடாத செயலா? ல்லவே! கொள்கைகளைப் பரப்ப டையைபோல நாடகமேடையும் ந வழி! இதிலென்ன அருவைப் இடமிருக்கிறது? நமது நாட் பழைமைக் கொள்கைகள் பரவ கதாகாலேட்சபங்களும் சங்கீதக் சேரிகளும், நாடகங்களும்தானே, ந காலத்தில், சாதனங்களாயிருந் ருக்கின்றன. கேடுபயக்கும் பழை மையை மாய்க்கும் நாம் அதே சாத ங்களைக் கையாள்வது எங்ஙனம் வறு? காங்கிரஸ்காரர்களும் தன் காரிக்கையைக் கூற நாடகமேடை யப் பயன்படுத்தாமலா இருந்தார் ள்? எத்தனை நாடகமேடைகளில் கொக்கு பறக்குதடி பாப்பா'' பண்டிதமோதிலால் நேருவைப் றிகொடுத்தோமே!'' பாடல்கள் டப்பட்டன. அப்போது மட்டும் ன்றல்லவே! இப்போதுகூட, துமை நாடகம் என்கிற பெயரில் டைபெறும் 'மனிதனும் மிருக மும்' போன்ற நாடகங்களில்— அங்கு மக்கள் போகாமலிருக்கலாம், அது வேறு விஷயம்—இவர்கள் பிரச்சாரம் இல்லாமலா இருக் கிறது?

நம்மீது இந்தக் குற்றச்சாட்டை வீசுவது—பொறாமையின் விளைவே யொழிய, வேறு எதுவும் காரண மில்லை.

அவர்கள் நம்மீது துவேஷமும் பொறாமையும் கொண்டு அனைக் கக்குவதைக் காண நமக்கு பரிதாபந் தான் வருகிறது.

ஏனெனில், அவர்கள் நம்மைப் பார்த்து எரிச்சல் கொள்வதில் அர்த்தமில்லை.

நாம் புதுமையைக் கண்டோம்— வளர்க்கிறோம்—வளர்கிறோம்; ஆதர வோடு.

இதுதான் உண்மை! இதை மறந்துவிட்டு, பழைமை வீட்டில் இருந்து கொண்டு நம்மீது பாய்வது பைத்தியக்காரத்தனமேயன்றி வேறென்ன?

* * *

புதுமையைத் தடை செய்வது வெளிச்சத்தை மறைக்க முயலும் வீணன்போக்கையே ஒக்கும்! கருத்துமாற்றம், காலப்போக்கில்ஏற் பட்டே தீரும். இதை, எந்த அர சாங்கமும் அழிக்கமுடியாது; அடக் கவும் முடியாது.

இதை நமது நாடகங்கள் என்றால் தொல்லைதரும் சர்க்கார் உணர வேண்டும். அடக்கு முறைக்கு ஆளான எந்த நாடகமும் பட்டுப் போனதாக, சரிதத்தில் காணுவதற் கில்லை.

சமுதாயத்தின் கோணல் மாணல் களைச்சித்திரித்த (Mrs warrens-Profession) (வாரன் அம்மையின் தொழில்) என்று ஒரு நாடகத்தைத் தீட்டினார், பேரறிஞர் பெர்னட்ஷா.

அந்த அம்மை சமுதாயத்தால் 'சீ! சீ!' என்று காரியுமிழப்படக் கூடிய காரிகை. அவள் அந்த நாட கத்தின் கதாபாத்திரம். அவளுக்கு ஒருமகள். மகளைக் காதலித்து ஒரு இளைஞன்!—கடைசியில் அந்த இள மங்கை தன்னைக் காதலித்தவனை மறக்கிறாள். மறக்குமுன் அவளும் அம்மாவும் தனியாகச் சந்திக்கிறார் கள். அம்மாவைக் கேட்கிறாள் அப் பெண், "அம்மா! யார் என் தந்தை? எங்கே நமது உற்றார் உறவினர்?'' இதுபோல. தாயால், அவள் தகப் பன் யாரென்று கூறமுடியவில்லை!— ஒரு ரசமான நாடகம் இது. பார்ப் போரைத்தூண்டும், அருமையான சித்திரம்.

இந்த நாடகத்தை முதலில்கண்ட போது சீமான்கள் சீறினர்—சர்க் கார் பாய்ந்தது. அந்த நாடகம், தடை செய்யப்பட்டது. எங்கும் நடத்தப்படக்கூடாது என்று சட் டத்தால் தடுக்கப்பட்டது.

ஆனால் இன்றோ! அந்த நாடகத் தைக் கண்டுகளியாதோர் இல்லை, பிரிட்டன்மாநகரில்.

இதுபோலப் பலப்பல சம்பவங் கள் உண்டு—பற்பல நாடுகளிலும்.

இதை, இந்த ஆட்சியாளர் கருத் தில் வைக்கவேண்டும்.

நமது நாடகங்களை தங்களது அதி கார அம்புகளால் சர்க்கார் தடுக்க லாம்—ஆட்சி இருக்கிற காரணத் தால்.

அந்த தடை, மீறப் படாமலே இருக்கும் என்பது என்ன நிச்சயம்?

பன்முறை நாம் இதை எடுத்துச் சொல்லி வந்துள்ளோம். அடக்கு முறை தொடர்ந்து நீடிக்குமேயா னால், சட்டத்தை மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை.

இந்த எச்சரிக்கையை மீண்டும் திண்டுக் கல்லில் கூடிய தி. மு. க. எழுத்துரிமை பேச்சுரிமை மாநாட் டில் சர்க்காருக்கு அறிவித்துள் ளோம்.

"தொடர்ந்து இதே முறையில் சர்க்காரின் அடக்குமுறை நீடிக்குமே யானால், அதைத்தடுத்துநிறுத்த தீவிர மான நடவடிக்கையில்ஈடுபடுவோம்'' என்பதே, அத்தீர்மானத்தின் கருத் தாகும்.

இதற்கென சர்க்காருக்கு இர ண்டு மாத தவணையையும் தந்திருக் கிறார்—தி. மு. க. பொதுச் செய லாளர்.

பார்ப்போம்—தேர்தல் முஸ்தீபு களில் இறங்கியிருக்கும் சர்க்கார் கவனிக்கிறதா இல்லையா என்று.

வழக்கம் போல அலட்சியமே பதிலாகக் கிடைக்குமென்றால், நமது தீர்மானம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்.

(5-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாகிறது!

அழகிய முகப்பு:
இரண்டாம் பதிப்பு
விலை ரூ 1—10—0
குயில் பதிப்பகம்
(A.) தெப்பக்குளம், : : திருச்சி.

எங்கே சொல்லி அழுவது?

கண்ணீரும் கம்பலையுமாய் நிற்கின்றனர் மக்கள். அவர்கள் எழுப்பும் கூக்குரல், கல்லையும் கரைக்கும். சென்னை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்துவரும் பட்டினிச் சாவுகள் பற்றிய தகவல்கள் நெஞ்சைத் திடுக்கிடச் செய்கின்றன. நினைத்ததுகூட இல்லை, இப்படியெல்லாம் நடக்குமென்று!

வாழப்பிறந்தோருக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளில் மிகமிக முக்கியமானது, உணவு. அதற்கு இவ்வளவு திண்டாட்டம்! திணறல்!!

சுயராஜ்யம் மலர்ந்தது முதல், இந்த உணவுப் பிரச்சினையால் உருக்குலைந்தோர், கோடானுகோடி மக்கள். இந்திய பூமியில் வாழ்வோர், நடைப்பிணங்களாகிவிட்டனர். நாள்தோறும் உணவுபற்றிவரும் செய்திகள், மக்கள் வாழ்வில் மண்ணையள்ளி வீசிய வண்ணமே உள்ளன.

வெள்ளையன், அந்நியன் அவனது ஆட்சியில் கூட இவ்வளவு அலங்கோலம் ஏற்பட்டது கிடையாது. அகில உலகையும் போர் மேகங்கள் கப்பிச் சூழ்ந்து, 'என்ன நேருமோ?' 'என்ன ஆகுமோ?' என்று திகைத்துக் கிடந்த, அந்த ஆபத்து நேரத்தில்கூட இவ்வளவு நெருக்கடி நேரவில்லை — வயிற்றுக்குப் போதுமான உணவு கிடைத்தது. ஆனால் இப்போது!

காங்கிரசாட்சியில் அரிசிப் பங்கீடு தேய்ந்து கொண்டே இருக்கிறது. எவ்வளவு விசித்திர மாற்றங்களைக் கண்டோம்! எத்தனை புதுப்புது மாற்றங்களைத் தந்தனர்! எவ்வெவ்வளவு விநோத யோசனைகளைக் கூறினர்!!

முதலில் உணவு இலாகாவின் பொறுப்பில் ஒரு அமைச்சர் இருந்தார், அவருக்குப்பதில் வேறொருவர் அமைச்சராக இருந்தால் திறமையாக வேலை நடைபெறும் என்று டில்லி கருதியது! பிரபல்யமான, மகாபுத்திசாலி, அதிமேதாவி என்றெல்லாம் வர்ணிக்கப்பட்ட கே. எம். முன்ஷி என்கிற ஆத்மா, இந்திய உணவு அமைச்சராக பதவியேற்றது! அதன் பலாபலன்கள்: "பருத்திக் கொட்டைச் சாப்பிடு!" "பிண்ணாக்கைத் தின்னுங்கள்!" "பிருந்தாவனம்காணவாரீர்!" "வனமகோத்சவம்!" "ஒரு நாள் உணவை ஒழிப்பீர்!" முதலாய போதனைகள், புறப்பட்டன. வாரமொரு போதனை— அதையொட்டி இவ்வாரம் முன்ஷியார் தந்துள்ளது: "சாப்பிட்ட இலையில் சாதத்தை மீதம் வைக்காதீர்!" என்பது.

கேலியல்ல!—எவ்வளவு வேதனையானது, இது ஐயோ, பசி என்று அலறி மடிகின்றனர், மக்கள். கூழுமில்லை குடிக்கச் சிறிது கஞ்சியுமில்லை என தத்தளிக்கின்றது, ஒவ்வொரு குடும்பமும். ஆனால் இந்த பம்பாய் வக்கீல், பரமோபதேசங்கள் செய்கிறார்!

உபதேசங்கள் பெருத்தனவே யொழிய, அரிசி ரேஷன் 16 அவுன்ஸ் 14 ஆகக் குறைந்து, பிறகு 14, 12 ஆகி, கொஞ்ச மாதங்களுக் கெல்லாம் 12, 10 ஆக வந்து, 10 பிறகு 8 ஆக ஆகி, அதுவும் இப்போது எட்டும் ஆறாகியிருக்கிறது!

வரும் ஆகஸ்டு மாதம் 12ந்தேதி முதல் சென்னை மாகாண முழுமையும் அரிசி ரேஷன் 6 அவுன்சாக ஆகும்.

என்பதாக, இவ்வாரம், சென்னை சர்க்கார் அறிவித்துள்ளனர். ரேஷனைக் குறைக்கும்படி நேர்ந்தமைக்கான காரணத்தைக் கூறும் பொழுது, 'வழக்கம்போல டில்லி சர்க்கார் மேற்கொண்டு அரிசி அனுப்ப இயலாது' என்று கூறிவிட்டதாகத் தெரிவித்துள்ளனர். இந்த ஒப்பாரியோடு, மக்கள் வயிற்றில் அடித்துள்ளனர்.

ரேஷன் குறைந்தது மட்டுமல்ல! அதோடு கூட சர்க்கார் பிறப்பித்திருக்கும் மற்றொரு உத்திரவு [illegible] மேல் வேதனை தருவதாக உள்ளது.

அரிசி குறைக்கப்பட்டிருக்கிறது, ஆறு அவுன்சாக என்று!

ஆனால் அரிசி விலையோ உயர்த்தப் பட்டிருக்கிறது.

சென்னைப் படி, ஒன்றுக்கு 7 [illegible] பிடி அதிகம் என அரிசியின் விலை[illegible] உயர்த்தியுள்ளனர்—சர்க்கார்.

இந்த அலங்கோலத்தை எங்[illegible] சொல்லி அழுவது?

அரிசி கிடைக்காமல் மக்க[illegible] அல்லாடுகிறார்கள். அதற்காவ[illegible] செய்யாத சர்க்கார், மக்கள் தலை[illegible] புதுச் சுமையையும் ஏற்றுகிறார்க[illegible]

இந்த கேவலத்தை எத்தனை நா[illegible] தான் சகிக்க முடியும்? எவ்வள[illegible] நாட்கள் தான், இந்தத் திறமை[illegible] யற்றோர் திருவிளையாடலால் ந[illegible] அவதிப்படுவது?

முகத்தை மூடிக்கொண்டு தி[illegible] வேண்டிய முத்தண்ணுக்களாக ஆ[illegible] விட்டனர் காங்கிரஸ் சர்க்கா[illegible] இப்போது தேர்தல் வேலைகளி[illegible] மும்முரமாக இறங்கிவிட்டனராம்[illegible]

"வோட், கொடு" — என்று ம[illegible] களிடம் கேட்டால், அவர்கள் வா[illegible] பதில் சொல்லாது; கண்ணீரும்[illegible] எலும்பும், ஒட்டிய வயிறும், 'பா[illegible] களே! பாவிகளே!!' என்று கூறும[illegible] கூறும்! அந்த வயிற்றெரிச்சல் முன்[illegible] இவர்கள் வாய் ஜாலம் புயலுக்[illegible] முன் சிறு தூசுதான் ஆகும்!!

ஆளும் சூத்திரம் கையிலிருந்து[illegible] அலங்கோலத்துக்கு மேல் அல[illegible] கோலங்களை அள்ளி வீசும் திறமை[illegible] யற்ற திருக்கும்பல் ஆளவந்தா[illegible] ஆனதை, இங்கன்றி, வேறெங்[illegible] காண முடியும்? வெட்கக் கேடு!

பம்பாய் வக்கீல் பாதையிலே, இந்த ஆட்சி நடந்து போய்க்கொண்டேயிருந்தால், மிகப் பயங்கர எதிர்காலத்தை அவர்கள் எதிர்பார்க்கத்தான் வேண்டும், இது எச்சரிக்கை, நல்லெண்ணத்தால் நாம் தருவது[illegible]

✻

நாடக உலகில் ஓர் புரட்சி

சரிகிறது சாம்ராஜ்யம்!

சிரிக்கிறது நீதி!! ஆனால்.......

இதன் முடிவுரை தருகிறான்

முல்லை நாட்டு இளவரசன்

[கதை, வசனம். சி. எஸ். அறிவழகன்]

விலை ரூ. 1—4—0

சந்திரா பதிப்பகம்

(A)சிங்காரத்தோப்பு:: திருச்சி. p.o

வீடனும் 'தேனி'யுர்!

★

"மந்திரி ஒரு சுயநலக்காரர்"

"தனது பொறுப்புக்களை றந்து இஷ்டம்போல் திரிகிறார்"

"பதவி வகிக்க சிறிதும் இலாயக் ல்லை"

"பதவி வெறியர். படுமோசக் ாரர்."

* * *

இந்த விதமாக, ஒரு மந்திரியார் ீது குற்றங்கள் சாட்டினான் ஒரு இளைஞன். அந்த மந்திரியாரின் ோக்கு நாட்டுக்கு நன்மை விளை க்காதென்றும் ஆகவே அவர் லக்கப்பட வேண்டுமென்றும் புகார் கூறினான். அதற்கான ஆதா ங்கள் பல அவனிடமிருப்பதாக ும் வெளியிட்டான். குற்றச்சாட்டு ளைக் கூறி மக்களிடையே உலவி வந்த அந்த நல்லவன், சின்னாட் களுக்கெல்லாம் காணப்படவில்லை. ஊரார், 'அவன் எங்கே?' என்றனர். 'நேற்று இங்கு இருந்தானே!'— இது போலச் சிலர் பதில் தந்தனர். நல்லவனாச்சே! எங்கே போனான்?' இப்படியெல்லாம் கவலை தெரிவித் தனர், கற்றோர். ஆனால் அவனோ வைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பலாத்காரமாகத் தள்ளப்பட்டுக் கிடந்தான்!

ஊராருக்கு பிறகு, மெதுவாக விஷயம் தெரியவந்தது. அந்த இளை ஞனைப்பற்றி கிளர்ச்சி செய்யத் துவங்கினர். டாக்டர்கள் வைத்து பரிசோதனை செய்தனர். கடைசி யில் உண்மை வெளியாயிற்று. எந்த மந்திரியின் ஊழல்களைப் பகிரங்க மாக வெளியிட்டானோ, அந்த மந் திரி தனது கையாட்கள்மூலம் அவ னைப் பிடித்து, செல்வாக்குமூலம் வைத்யக்கார ஆஸ்பத்திரியில் சேர்த் தார் என்பது தெரியவந்தது. பலர் பதறினர்! அந்த இளைஞனோ சிறிது கூட கவலைப்படவில்லை 'எனக்கு இதுதான் கிடைக்குமென்று தெரி யும். இப்போதாவது உண்மையைக் காண ஏற்பாடு செய்யுங்கள்' என்று கூறினான்.

* * *

மந்திரிமீது குற்றஞ்சாட்டப்பட் டதும், இந்தச் சம்பவம் நடந்ததும், ஸ்வீடன் தேசத்திலேயாகும். இலாகா இல்லாத மந்திரியான நில்ஸ்குயன்ஸோல் என்பவர்மீது, ஒருவாலிபன் குற்றஞ் சுமத்தினான். அதனால் ஆத்திரப்பட்ட அந்த அமைச்சர் போலீசார்மூலம் அவ னைப் பைத்தியக்கார விடுதியில் கொண்டுபோய்த் தள்ளியிருக்கிறார்.

ஆனால் அத்தேச மக்களோ, மந் திரியாரின் இம்மதோன்மத்தசெயல் கண்டு சும்மாயிருந்துவிடவில்லை. கிளர்ச்சி செய்தனர்.

வாலிபனின்மீது மந்திரியாரால் வேண்டுமென்றே பழி வாங்கப்பட் டிருக்கிறது என்று கேள்விப்பட்ட தும் அந்த நாட்டு நீதி இலாகா, உடனடியாக விசாரணை செய்து தகவல் தருமாறு பப்ளிக் பிராசி கியூட்டரைக் கேட்டிருக்கிறது.

அந்நாட்டிலுள்ள பத்திரிகை களெல்லாம் அந்த மந்திரியாரின் போக்கைக் கண்டித்து, அவர் ராஜி னாமா செய்யவேண்டுமென வலியு றுத்தி எழுதி வருகின்றன.

ஒரு பாதிரியார் கூட, மந்திரியா ரின் தகாப் போக்கைக் கண்டித்து, நல்லதோர் விசாரணை நடத்தப்பட வேண்டுமென அறிக்கைகள் விடுத் திருக்கிறார்.

இது அங்கு!

ஆனால் இங்கோ?

ஆட்சியாளரின் ஊழலை எடுத்துச் சொல்லி, தவறுகளைச்சுட்டிக்காட்டு வோருக்கு எத்தனை யெத்தனை அல்லல்கள் தரப்படுகின்றன. சிறை! குண்டுமாரி! துப்பாக்கித் துரைத் தனம்! இத்தனையும், எதிர்க் கட்சி கள்மீது வீசப்படுகின்றன, ஆளும் கட்சியால்.

மற்றோர் பக்கத்தில் தமது கட்சி யைச்சேர்ந்த பிரமுகர்களைத்தூண்டி விட்டு அரிவாளும தடியடியும்தாங்கி எதிர்க் கட்சியினரை மிரட்டுகின்ற னர் 'தேனி'யைப்போல்.

இந்தக் கொடுமைகளைக் கண்டு, "இவைகள் குறித்து பொதுவிசாரணை நடத்தப்படவேண்டும்" எனக்கோரி னால், இங்குள்ள முதலமைச்சர் 'முடியாது' என மறுக்கிறார். முக் கிய பத்திரிகைகளாக உலவுபவை களோ, எதிர்க்கட்சியினருக்கு என்னகேடுகள் இழைக்கப்பட்டா லும் 'வாய்மூடி மௌனி'யாகவே இருக்கின்றன.

3-ம் பக்கத் தொடர்ச்சி

நாடகப்போர் — தேர்தலுக்கு முன்பு — நாடெங்கும் நடைபெற லாம்.

நாக்கை அறுக்கும் சர்க்காரில் வாழ்வதைவிட காடு மேலாயிற்றே! புதுமைக்குச் சாவுமணி அடிக்கும் போக்கைக் கண்டு பொறுத்துக் கிடக்க நாம் புல்லரல்லவே! பொது வாழ்வுக்கென, நம்மையே அர்ப் பணிக்கக் காத்துகிடக்கும் நாம் ஒரு நல்ல காரியத்துக்காக உயிரிழந் தால்தான் என்ன!

திமிர்பிடித்து அலைந்த ரஷ்ய ஜாரின் ஆட்சிக்கு சமாதிகட்ட "இரத்த ஞாயிறு" தினம் வீதி களிலே ஓட விட்ட இரத்தக் காணிக்கை, சியாங்கேய்ஷேக் விரண் டோட சீன இளைஞர்கள் குவித்த பிணமலைகள், பிரெஞ்சு மக்களின் சிதைந்தவாழ்வு, இவைகளையெல் லாம் கவனத்தில் கொள்வோம்! இந்தக் காட்டாட்சித் தர்பாரை, நீடிக்க வொட்டாது தடுக்க, சபதம் கொள்வோம்! நம்முடைய வீர மூச்சு, ஒரு முறை அலறிவிட்டு, பிறகு ஓய்ந்து போகட்டும்! மக்களு ரிமைக்காகப் போராடியோர் என்ற மாப்புகழை நமது பரம்பரை தாங் கிக் கொள்ளட்டும்!

நீதியைக் கொன்று நேர்மைக் குத் திரையிடும் பொல்லாப் போக்கை எதிர்க்க நம்மையன்றி யாரும் இல்லை இந்தச் சமுதாயத் தில். நயவஞ்சக நரிகளுக்கிடையே உலவிடும் புலிகளாகயிருக்கிறோம். நமக்குள்ள உரிமையைக் காக்கத் தயாராகவேண்டியது தான். 'செயல் — அல்லது சாவு!' இந்த மூல மந் திரம் நமது பரம்பரைச் சொத்து. இதன் விளக்கொளியில் புதுப் பாதை அமைப்போம். தயாரா வோம்!

தருக்கு கொண்டலையும் தர்பா ருக்கு அடங்கிக் கிடக்க ஆமைகளு மல்ல; நாம் ஊமைகளுமல்ல! சுதந் திரம் நமது பிறப்புரிமை! அதைக் காக்கத் துடித்தெழுவோம்!

சிங்க இளைஞனே—திருப்புமுகம்!!

திறவிழி!

கையிருப்பைக்காட்ட எழுந்திரு!

★

திராவிடநாடு

ஞாயிறு] 5—8—51 [காஞ்சி

பதக்கம்

லஞ்சம், இனிஇங்கு பஞ்சம்!
தஞ்சம் தருவோர் மிகக் கொஞ்சம்!
மிஞ்சி விடினாலே நஞ்சாம்.
எஞ்சியிருப்பதும் இனி நஞ்சாம்!

லஞ்சம் இனிப் பஞ்சாய் பறந்து விடும் இங்கு, நாணயம், நேர்மை, ஒழுக்கம், யோக்கியப் பொறுப்புகளுக்கே இங்கு விரிக்கப்படும் மஞ்சம் என்று நாவுலர, உலர, உரத்த குரலில் கூறினோர்தான் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர். அதுவும், தொடர்ந்து நான்காண்டுகளாக!

லஞ்சம் போக முயற்சிகள் பல எடுப்பதாக வேறு ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த முயற்சிகளில் ஈடுபட்ட தனியமைப்புகள், அதிகாரிகள்வேறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் திறமைசாலிகள் என்று வேறு புகழ்ந்தபடியுள்ளனர்.

சென்ற திங்களில், டெல்லியில், நடந்த இந்திய சர்க்காரின் விசேஷப் போலீஸ் ஸ்தாபன அதிகாரிகள் மாநாட்டிற்குச் சென்றிருந்த இந்திய உள்நாட்டு மந்திரி கனம் ஆச்சாரியார் லஞ்ச ஊழல்களைக் கண்டுபிடித்த அதிகாரிகளை பாராட்டியிருக்கிறார்.

லஞ்ச வழக்குகளைக் கண்டு பிடித்த, கல்கத்தா, டெல்லி போலீஸ் அதிகாரிகள் இருவருக்கும், அன்பர் ஆச்சாரியார் விசேஷ பதக்கங்கள் அளித்துள்ளார்.

லஞ்ச ஊழல்களைக் கண்டுபிடித்தனர் அதிகாரிகள்! பதக்கம் அணிவித்தார், பாராட்டினார், பாராளும் மந்திரி!

இந்த அளவோடு நிறுத்தியிருந்தால், ஆட்சியாளரைப் பாராட்டத் தோன்றும். ஆனால், அத்தோடு நிறுத்தவில்லை.

பதக்கம் தரும் முன், பரமோபதேசம்! அதில் பதக்கம் பெற்றவர்கள் செய்த செய்கையைப் பாராட்டியல்ல, ... நிற மாதிரியில் போதனையை ... புகுத்தியுள்ளார்!

பதக்கம் ... முன் பாதக போதனை!

அதிகாரிகளா லஞ்சம் கேட்கிறார்கள்? மக்கள், தாங்களே தருகிறார்கள்!

சர்க்கார் அலுவல்கள் விரிவடைந்துள்ளன. அதன் காரணமாக, நாணயக் குறைவு, லஞ்சப் பழக்கம் முதலியவற்றிற்கு புதிய சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன.

நாணயக் குறைவான அதிகாரிகளைக் காட்டிலும், நாணயமுள்ள அதிகாரிகளே அதிகம்.

மக்கள் முன்னர் புகார் செய்வதில்லை. இப்போழுது புகார் செய்ய ஆவலாயுள்ளார்கள்.

ஆகவே, லஞ்சக் குற்றங்கள் அதிகமாகிவிட்டதுபோல் தெரியும். ஆனால் உண்மையில் அப்படியில்லை!

இப்படி வேத வாக்குகளை வேண்டிய மட்டும், உதிர்த்துவிட்டு, பதக்கம் அணிவித்துள்ளார், ஆச்சாரியார்.

இந்த உபதேசம் நெஞ்சிலே புகுந்ததும், லஞ்ச வழக்குகளைக் கண்டு பிடிப்பதிலே மனம் செல்லுமா, அதிலே என்ன தவறு என்று யோசிக்க நேரந் தேடுமா என்று கேட்கத் தோன்றும்.

அவருக்கு அது தெரியாததல்ல— தெரிந்தே சொல்லியிருக்கிறார்!

லஞ்சம் பெறுவோரின், சமூகத் துரோக நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்து, அம்மாதிரி துரோகத்தைத் துருவித் துளைத்துக் கண்டுபிடித்த அதிகாரிகளுக்குப் பதக்கம் தந்திருந்தால், அந்த அதிகாரிகள் மேலும் முயற்சி செய்வர்.

லஞ்ச ஊழல் காரர்களுக்காக, பரிந்து பேசுகிறார்! புல்லைக் காட்டுகிறார், மந்திரியார்.

லஞ்சம் வாங்குவோருக்கு, வக்கீலாகிறார், மந்திரியார். லஞ்சம் பெறுகிறார்கள் என்றால், அவர்கள் மீதும் குற்றமில்லை, சந்தர்ப்பங்கள் சதி செய்கின்றன, நிலைமைகள் தூண்டிவிடுகின்றன என்று, அவர்களுக்கு இவர் கெஞ்சுகிறார்!

பிறகோ, பாராட்டுகிறார்! பதக்கம் தருகிறார்!!

லஞ்ச வழக்குகளில் சிக்கியவோர், யாராயினும் யாராக இருந்தவர்கள் என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால், ஆச்சாரியாரின் அந்தரங்க நாரிசுவர நடவடிக்கைக்கு அர்த்தம் தெரியும்.

லஞ்சக் குற்றத்திற்கானவோர் பக்கம், ஆச்சாரியார் நிற்கிறார்! ஆச்சரியமிருக்காது, அதன் ... புரிந்தால்!

லஞ்ச வாழ்வினரில் பெரும்பாலோருக்கும், அவருக்கும் ஏதோ தொடர்பிருக்க வேண்டும்! இல்லாவிட்டால் பரிந்து பேச மாட்டார் ... எரிந்து விழவேண்டிய நேரத்தில்.

ஆம், அவருக்கும், லஞ்ச ... பெற்றுப் பிழைப்பை நகர்த்துவோருக்கும் தொடர்பு இருக்கிறது! கட்சியால் என்பர் கவனக்குறைவுள்ளோர். குலத்தால் என்பர், கூர்மையான குறிப்பு தேடுவோர்!

அதனால்தான்போலும் பேச்சில் பரிவு இருக்கிறது! என்பர்,—பலர்.

ஆனால், பதக்கம் தருகிறாரே என்று எண்ணலாம். மக்கள் இருக்கிறார்களே! அவர்கள், லஞ்சம் வாங்குவோனைக் கண்டு நெஞ்சுவேகிறார்களே! அவர்களைத்திருப்தி செய்யவேண்டாமா? ஆகவே பதக்கம் தந்துள்ளார்.

திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

மாநில மாநாட்டு ரசீது புத்தகங்கள் வந்து சேர்ந்துவிட்டன. ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில், நிதி வசூல் கமிட்டி தோழர்கள் அம்பில் தர்மலிங்கம், டி. வி. அழகமுத்து, கே. ஏ. ராஜு, வி. ஏ. செல்லப்பா, எம். எஸ். மணி முதலியோர் மாவட்டம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஆங்காங்கேயுள்ள முக்கிய தோழர்கள் பட்டியல் தயார் செய்து வைத்தால் வரும் தேதி, நேரம் பிறகு தெரிவிக்கப்படும் என திருச்சி மாவட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

ஆனால், பதக்கத்தை அவர் அணிவிக்கும் பொழுது, அந்த அதிகாரிகள் பதறிப் போயிருப்பர்!

ஆம், இனி அவர்கள் லஞ்சக் குற்றம் புரிவோரைப் பிடிக்கிற நேரத்தில், ஆச்சாரியாரின் உரை நினைவிற்கு வரும். ஒரு கணம் யோசிப்பர். பிறகு விட்டுவிடத்தான் தோன்றும்!

அதுவும், ஆச்சாரியார், லஞ்சக் குற்றவாளிகளைப்பிடிப்பது, அடைப்பது, கோர்ட்டில் நிறுத்துவது, தண்டிப்பது இவைகளிலே உள்ள கடினங்களை வேறு அலசியெடுத்துவிட்டார்!

இத்தனையும் கூறிவிட்டுப் பதக்கம் தந்துள்ளார்!

அந்தப் பதக்கம், அவர்களுக்கு, மகிழ்ச்சியையா தந்திருக்கும், பயத்தையல்லவா தந்திருக்கும்!

அந்தப் பதக்கம், பாராட்டத்தந்ததல்ல, பயமுறுத்த!—என்றேஅதிகாரிகள் நினைத்திருப்பர்.

அவர்கள் மார்பிலே தொங்கும் பதக்கம், நெஞ்சிலே நீங்காது குத்தியிருக்கும் ஈட்டி!

லஞ்சக்குற்றவாளிகளை ஒருமுறை பார்ப்பர். பிறகு மார்பிலே தொங்கும் பதக்கம் தெரியும். நெஞ்சிலே அச்சம் அரும்பும். அவர்களை விடுவர். 'ஆச்சாரியார் காட்டிய வழி' நடப்பர்!

* * *

அவசியமில்லாத கேள்விகள்! இருந்தும் பொறுமையுடன்நேரான பதில்கள்!

அவன் சொல்லிக்கொண்டேயிருந்தான்! முகத்தில் கோபம் கொப்பளிக்கவில்லை! உள்ளத்தில் எரிச்சல் இல்லை! சிரித்த முகத்துடன், பொறுத்தமில்லாத கேள்விகளுக்குப்பதில் சொல்லிக்கொண்டேயிருந்தான்!

வந்த ஆசாமியோ விடுவதாக இல்லை! மேலும், மேலும்கேள்விகள்!

தெருக்களிலுள்ள வீடுகளையெல்லாம் காட்டி, அவைகளின் விலை, சொந்தக்காரர் பெயர், வாடகை இப்படிக் கேட்டுக்கொண்டேயிருந்தார்.

அவன் பொறுமையிழக்கவில்லை! போடா, வாடா என்றுபேசவில்லை! புன்சிரிப்புடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்!

அதே நேரத்தில் அவன் வேலையையும் செய்து கொண்டிருந்தான்!

அவனே, போக்குவரத்து நீக்கமற நிறைந்திருக்கும் இடத்திலுள்ள வழி ஒதுக்கும் போலீஸ்காரன். வந்த ஆசாமி பாதையின் நடுவிலே நின்றுகொண்டு பட்டிக்காட்டான் தர்பார் நடத்துகிறார்.

அவன் சீறவில்லை! சிரித்தான்! ஆனால், அவன் நினைத்தால் செய்திருக்க முடியும்!

இதுகூட விசித்திரமில்லை! அந்த ஆசாமி, அவன் நேரத்தை வீணாக்கி விட்டதற்காக, கொஞ்சம்பணத்தை எடுத்து நீட்டினார்.

வேண்டாம் என்றான். விடவில்லை அந்த ஆசாமி!

அது லஞ்சங்கூட அல்ல, பரிசு! அதுவும் விரும்பித்தந்தது. இருந்தும் மறுத்துவிட்டான்.

மேலும் வேண்டினார். அவன் சீறினான்! சினந்தான்!

கேள்விகேட்ட அந்த ஆசாமி வேறு யாருமில்லை கோவை ஜி. டி. நாயுடு அவர்களே!

இலண்டனில், அவர்கண்ட சுவையான நிகழ்ச்சி!

லஞ்சத்தை எதிர்க்கும் எண்ணம் சாதாரண போலீஸ்காரரிலிருந்து, எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது அங்கெல்லாம் என்பதற்கு இந்நிகழ்ச்சி அரிய எடுத்துக்காட்டு.

அவன் லஞ்சம் கேட்கக்கூட இல்லை. கொடுக்கவந்தவரையே கடிந்துகொண்டான். அவனுக்கல்லவோ பதக்கம் தரவேண்டும். ஆனால் அது அங்கு கடினம். ஏனெனில் அங்கு எல்லோருமே அப்படி! இங்கு வேண்டுமானால் எளிது. ஏனெனில், அத்தகைய ஒழுங்கு மனப்பான்மையுள்ளோர், ஓரிருவரே இருப்பர்!

லஞ்சம் பெறுவோருக்குத் தஞ்சம் தருகிறார் மந்திரி! கொஞ்சிக் குலவுகிறார்!

பதக்கம் தந்து பாராட்டுவது போலப் பயமும் காட்டுகிறார்!

ஆனால், அவர் இங்கு மந்திரி — அவருக்கு கீழுள்ளோர்தான் நாம்! வேதனையாகத்தானிருக்கிறது. நிலையை நினைத்துக்கொண்டால் வெட்கமாகக்கூட இருக்கிறது!

* * *

சர்க்கார் அதிகாரிகளின் சொத்து நிலவரத்தைக் கணக்கெடுத்து, தங்கள் உத்தியோக செல்வாக்கால் சேர்த்திருந்தால், அவர்களை வேலையைவிட்டு நீக்குவதுடன், மீண்டும் எந்தஉத்தியோகத்திலும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சேர்க்கக்கூடாது.

கே. டி. ஷா. டெல்லி பார்லிமெண்ட்டுக்கு இப்படியொரு தீர்மானம் அனுப்பியுள்ளார்.

ஆச்சாரியாரோ, இலஞ்சம் பெறுவோரின்பஞ்சநிலையையும், பரிதாபக் கோலத்தையும் படம் பிடிக்கிறார். அவர் மந்திரி!

பேராசிரியர் ஷாவோ, லஞ்சக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் நீக்க வேண்டும், வேலையைவிட்டு என்று தீர்மானம் அனுப்புகிறார். அவர் பார்லிமெண்ட் உறுப்பினர்!

அதுமட்டுமா? திட்டக் கமிஷனால், சர்க்கார் நிர்வாகமுறை சீர்திருத்த சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பித்துள்ள கோர்வாலா, கூறியுள்ளதைப்பார்த்தால், ஆச்சாரியாரின் பேச்சிலே நெளியும் விஷம் தெரியும்!

சந்தேகத்திற்குரிய முறையில் ஒரு அதிகாரி நடந்துகொண்டால்கவனிக்கப்படவேண்டும்.

அதிகாரியோ, அவரைச் சேர்ந்தவர்களோ, திடீரென்று பெருஞ் செல்வம் வைத்திருப்பார்களானால் விசாரிக்கவேண்டும்.

சொத்து சேர்ந்தது, லஞ்சத்தின் மூலமல்ல என்று நிரூபித்தாலொழிய அவர்கள் குற்றவாளிகளாகவே கருதப்படவேண்டும்.

விற்பனையாகிறது!

ஆர். சி. தீட்டிய

கொலைக்களம்

விலை அணா 6.

(A.)

வருமான வரி, சுங்க இலாகா மற்றும் வர்த்தக இலாகாவைச் சேர்ந்த பணிமனைகளில், லஞ்ச ஊழல்களை ஒழிப்பதில் இன்னும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர் இப்படிக் கூறியுள்ளார், லஞ்ச ஒழிப்பு சம்மந்தமாக! இவர் ஆலோசனை அருள, ஆட்சியாளரால் அழைக்கப்பட்டவர்!

உறுப்பினர் லஞ்ச ஒழிப்பிற்குத் தீர்மானம் அனுப்புகிறார்! அறிக்கை சமர்ப்பிக்கும் ஆலோசகர் தீவிரம் வேண்டும் என்கிறார்! ஆனால் மந்திரியார், லஞ்சம் வாங்குவோருக்குரிய சங்கடங்களைக் காட்டி, பரிவு தேடுகிறார்!

லஞ்சம் எப்படி ஒழியும்? ஆட்சியின் பிம்பம், ஆதரவு தருகிறது. ஆட்சியின் 'எடுபிடி' போன்றோர் எதிர்த்திடுவதால் பலன் என்ன?

லஞ்சம் பெறுவோரில் பலர் அவருக்குத் தொடர்புடையோர்—நூலால்தான்! கதர்நூல், புரிநூல், இரண்டாலுந்தான்!

பதக்கம் தருகிறார் மந்திரியார், பார்ப்போர், அவரைப் பாராட்டு! ஆனால், அதன்மூலம், பயமும் காட்டியிருக்கிறார்!

நரி நடைப் பேச்சிலும், நல்ல பாம்பு நடத்தையிலும்பெயர்போனவர்கள் நிறைந்துள்ளார்கள், ஆட்சியில் என்பதற்கு, ஆச்சாரியர் பேச்சும், அவர்தந்த பதக்கமுமே சாட்சிகள்!

லஞ்ச வழக்குகளைக் கண்டுபிடித்தவருக்குப் பதக்கம் பரிசளித்தார், ஆச்சாரியார்!

ஆனால், பஞ்ச தந்திரத்தில் பதக்கம் தருவதென்றால், அவரை மிஞ்சக்கூடியவர் எவருமிலர்! பதக்கம், தயக்கமின்றி அவருக்குச் சேரும்!

நாட்டோருக்கு, லஞ்ச ஊழல்களை ஒழித்திட மார்க்கம் வேண்டும் அதைக் காட்டுவோருககு, பதக்கம் தந்து பாராட்டாவிட்டாலும், இன்முகங்காட்டி பாராட்டுவர்.

மந்திரி தரும் பதக்கத்தைவிட, மக்கள் மகிழ்ச்சி கொப்பளிக்கும் முகம் விலையுயர்ந்தது — இதனை மறக்கக்கூடாது!

★

சென்னையிலும், காஞ்சியிலும்

கருத்து விருந்துகள்

8–8–51
புதன் மாலை
சென்னை
ஒற்றைவாடையில்

12–8–51
ஞாயிறு இரவு
காஞ்சி
அசோகா தியேட்டரில்

பொதுச் செயலாளர் அண்ணாதுரை முன்னிலையில்

மு. கருணாநிதியின் கற்பனை ஓவியம்!
தென்றல் வீசும் சித்திரச் சோலை!!

இயக்க வீரர்கள் :

மு. கருணாநிதி
ஈழத்துஅடிகள்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்
கண்ணதாசன்
சி. வி. எம். அண்ணாமலை
சி. வி. ராசகோபால்
கே. டி. எஸ். மணி
செ. கோ. பெருமாள்
ஆர். கே. மூர்த்தி
எத்ராசு
சபாபதி
மாணிக்கம்
கச்சபாலையம்
முருகேசன்

நடிக மணிகள்

சிவாஜி கணேசன்
எஸ். என். கிருஷ்ணன்
நம்பிராஜன்
மகாலிங்கம்
மணி & கே. ஆர். ஆர். குழுவினர்

தித்திக்கும் தமிழோசை
கேட்க வாரீர்!
தேன்பாயும் நல்லோடை
காண வாரீர்!!

தி. மு. க. நிதிக்கான நன் முயற்சி

புதுமலர்ச்சி
நாடக மன்றத்தார்.

யாத்திரை

தொடர் கதை —— தில்லை-வில்லாளன்

3

அம்மாவுக்கு

பத்மா

அந்த அறுபத்து நான்காவது நாயனுர், சோமசுந்தரர் நடத்தியது போல அறுபத்து ஐந்தாவது திருவிளையாடல் ஒன்று நடத்தியிருக்கிருர். என்ன பயங்கரம்......என் நெஞ்சு நடுங்குகிறது! ஆனல் அதை ஒரு அப்பா, மகனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிருர். கெட்டுப்போன கலிகால விரும்பிகளான புதுமைவாதிகள் சொல்லப் பயப்படும் நிகழ்ச்சி, அதனை அந்தப் பக்திமான் செய்யச் சொல்லியிருக்கிருர்!

திருமணமாகி சிலதினங்களுக்குப் பிறகு அவரை என் மாமா அழைத்தார். அவர் திட்டத்தைக் கண்டு பெண்ணுலகம் பயந்தோடும்.

"ஏண்டா, எப்பொழுதும் வாட்டமாகவே இருக்கிருய்........?"

"இதனை நீங்கள் கேட்டு தானு தெரிந்து கொள்ள வேண்டும்?"

"பொன்னி......" என்று பெருமூச்செறிந்தார் அந்த வயதேறிய பக்தர்.

"அவளை அடைந்து விட்டால் இப்படி வருந்த மாட்டாயே...... திருந்திவிடுவாய் அல்லவா?" என்று தொடர்ந்து கேட்டார் அவர், தன் மகனைப் பார்த்து!

"ஹாம்......அதை அப்பொழுதே யோசித்திருக்க வேண்டும்! அவள் அடிவானத்தில் நிற்கும் அழகு தேவதை. இனி எப்படி அப்பா முடியும்?......"

"முடியும்......நீ உலகை இன்னும் அறிந்து கொள்ளவில்லை"

"எப்படி?" என் கணவர் விழித்தார்"

என் மாமா ஒரு மேகவாகனம் அமைத்துக்கொடுத்து திரை மறைவில் திருக்கூத்து நடத்தும் தனிவையும் அளித்து அடிவான யாத்திரைக்கு அவரைத் தயாராக்கினர். எங்கே தன்மகன் சோகத்தால் மடிந்துவிடுவானே என்று பயந்தால் ஒரு பெண்ணை அவருக்கு ஆசைநாயகியாக்கவும் பயப்படவில்லை. பொன்னியிடமும் இப்படியே 'சாஸ்திர' வாதங்களைப் பேசினர். என் ஒருவளுக்கு இது தெரியக்கூடாது என்பது அவர்போட்ட திட்டம். அது இப்பொழுது அம்பலமாகிவிட்டது. தந்தை மகற்காற்றும் உதவி இதுதான்? இது எந்த தர்ம சாத்திரத்தில அடங்குமோ நான் அறியேன். எந்த நீதி இந்த திட்டத்திற்கு வழிவிட்டதோ...எந்த ஆண்டவன் ஒப்புதல் தந்தானே...எனக்குத்தெரியாது.

பழமையை வெறுக்கிறவள் நான் புதிய நிலைமை எல்லாத்துறையிலும் வேண்டும் என்று வாதாடுகிறவள் நான். எனக்கே அந்தஅக்கிரமத்தை நினைக்கவும் நடுங்குகிறது. ஆனல பழமை ஏதோ தூய்மையின் குடியிருப்பிடம்போலவும், புதுமை கெட்ட நடவடிக்கைகளின் தொட்டில்போலவும் பேசுகிருர்கள்! அறுபதினுயிரம் மனைவியை மணந்ததாகக் கதை யெழுதி ஆணின் அடங்காப்பிடாரித்தனத்தை அம்பலப்படுத்தியவர்கள்தானே! கணவன் விரும்பி காரணத்தால் தாசி வீடுவரை அவனைச் சுமந்து சென்று விட்டு வந்ததாகக் கதை யெழுதி பெண்ணின் வாயைப்பூட்டி ஊமைகளாய், ஆமைகளாய், ஆக்கிவிட்டப் பெருந்தகைகள்தானே பழமை பெண்று கூறுவோர்!

பணப்பெருக்கினல் எதையும் மறைத்துவிடலாம் என்று எண்ணுகிருர். அது பலிக்காது.

பிறர் கண்களில் மண்ணைத் தூவியே காரியங்கள் பல செய்துவிடலாம் என்பது அவரது கனவு — அது நிறைவாக்கமுடியாது.

பொன்னி சொன்ன கதை இது தானம்மா......

இனி என்ன செய்வது? எப்படி நடந்துகொள்வது? அவரோடு இனி பேசுவதா? இத்தனை திட்டத்தையும் தெரிந்துகொண்ட பிறகா...... முடியாது! ஆனல் அவரிடம் ஒருமுறையாவது இதுபற்றிப் பேசிவிடவேண்டும். இதைக் கேட்கும்பொழுது..... நெஞ்சிலே வழிந்தோடும், நினைவு வழுவழுப்பு......தானல்லவா உண்டாக்கிறது!

பெண் நினைக்கிருள் — அதுவே தவறு என்று சொல்கிறது சமூகம். ஆனல் ஆண் தகாததைச் செய்கிருன் — சமூகம் வாய்மூடிக் கிடக்கிறது. பெண் அங்கம்......ஆகவே சமூகக் கஞ்சன் பூட்டிப் பூட்டி வைக்கிறன்.

[ஓடிய கதை:- சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திருமணத்திற்கு வரமுடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினுள் பத்மாவின் தங்கை, லீலாவின் இளந்தோழிக்கை. அவள் வாழ்விலேயும் ஒரு நாள்...தெப்ப உற்சவம் பார்க்கச் சென்ற இடத்தில் தினகரனைச் சந்தித்தாள். அவனே அவளை வஞ்சித்து விட்டான். அதிலிருந்து, வாழ்க்கையில் வெறுப்புற்று ஆசிரியையாகவே இருந்துவந்தாள்.

பார்த்திபனை மணந்த பத்மா தன் வாழ்வில் சுந்தர் நினைவால் படுந்துயர் தாங்காமல் தவித்தாள். மேலும்......அவன் வீட்டிலே வேலை செய்து கொண்டிருக்கும் பொன்னியோடு கள்ள நட்பு கொண்டிருந்தான். இதனை அறிந்தாள் பத்மா. அது மட்டுமா? இதற்கு பார்த்திபனின் தந்தையும் உடந்தை. ஆகவே அவ்வை நேரிலேயே கேட்டாள் பொன்னியை. அவள் கணவனுக்கு மணமுடித்து, தான் விலகிக் கொள்ள தீர்மானித்தாள்.]

ஆண் இரும்பு...துரு ஏறிக் கிடக்கிறது கண்ட இடங்களில்! என்றாலும் அவர் செய்வது அநீதி—பாவம்! எனக்காக இல்லாவிட்டாலும் பொன்னியின் நல்வாழ்விற்காவது அவரிடம் இதுபற்றிப் பேசியாக வேண்டும், அந்த மாளிகையில் நான் தனியான மணிவிளக்கு, அந்த ஒளி பரவுகிற இடங்களில் அந்த இருள் எட்டிப் பார்ப்பதில்லை. ஆம், அவர் படித்து என்ன செய்வது? அவர் மதி யிருண்டுதானே போய்விட்டது. சொந்த மனைவியை அருகில் வைத்துக்கொண்டு அவளுக்குத் துரோகம் இழைக்கிறாரே! கண்ணகி, கோவலனை மாறினால், கோவலனுக்குக் கிடைத்ததுபோல ஒரு மாதவிக்குப் பதில் ஒரு மாதவன் கிடைக்க மாட்டானா? இதை ஏன் ஆண் வர்க்கம் அடியோடு மறந்துவிடுகிறது!

என்னைக் கண்டாலே அஞ்சியோடுகிறார். கீரியைக் கண்டு நாகம் நழுவுவதைப் போல மெதுவாகச் சென்று விடுகிறார். வலிய வார்த்தைகள் கொடுத்தாலும் இரண்டொரு வார்த்தைகளோடு நிறுத்திக் கொண்டு அங்கு போகவேண்டும், இங்கு இவர் வரச்சொன்னார் என்று எதையாவது சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவார்.

என் மனதை அதட்டினேன். அடங்கவில்லை!

ஒருநாள் வீங்கித் தொங்கிய என் இதயத்தை கரங்களால் தாங்கிப்படி அவர் தனியறைக்குள் நுழைந்தேன். அவர் ஏதோ கட்டுரைகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் அவைகளை மேஜையினுள் மறைத்துவிட்டார்.

“வா, பத்மா.........” என்றார் வழக்கமான குரலில்.

என் கண்களில் நீர் பெருகத் தொடங்கிற்று. ஒரு பக்கமாகத் திரும்பித் —துடைத்துக்கொண்டு அவர் அருகில் சென்றேன். எதிர்ப்புறத்தில் கிடந்த சோபாவில் உட்காரச் சொன்னார். ஆம், அவருக்கு முன்னால் மனைவியாக நடந்து கொண்டேன். அன்று வழக்காடவல்லவோ போயிருந்தேன்! அதுவும் நான் வழக்கறிஞரின் மனைவி!

“உபசாரம் போதும்......” என்றேன் வெடுக்கென்று.

“பத்மா......” என்று நிறுத்தினார். எதையும் பேசமுடியவில்லை.

“மனம்விட்டுப் பேசப் போகிறேன்......”என்றேன்

“என்மனைவிக்கு அந்த உரிமையில்லையென்று யாரால் சொல்ல முடியும்......” என்றார்.

“சட்டம் படித்தவர் தாங்கள்..... உரிமையைப்பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் பெண் நான். அந்த உரிமையைப்பறிக்கமுடியும் என்பதை உணர்ந்து விட்டேன். ஆம், பொன்னி அந்த உரிமையைத் தனக்குரிமையாக்கிக்கொண்டாள்”

என்பேச்சில் கொஞ்சம்பதட்டம் இருக்கத்தான் செய்தது. இருப்பினும் குரலில் கடுமையை கலக்கவிடவில்லை.

“பத்மா......நம் திருமணத்திற்கு முன்னால் சுந்தரைமட்டும் சந்தித்திருந்தால் இந்த தொல்லைகளில் எதையுமே நீ அனுபவித்திருக்க வேண்டியதில்லை!” அவர் அமைதியாகப்பேசினார்.

“ஆ......சுந்தர்.........” என்று கூவிவிட்டேன்.

அவருக்குச் சுந்தரைப்பற்றி எப்படித்தெரியும்? யார் சொல்லியிருப்பார்கள்?......என்றால் இந்ததிடீர்த் தாக்குதலைத்தாங்கமுடியவில்லை. என் நாவைத்தட்டிக்கொடுத்தேன். என் தொண்டையைத் ‘தாஜா’ செய்து கொண்டேன். இரத்த மழையால் சேதமடைந்திருந்த இதயத்தைக் கொஞ்சம் சரிசெய்துகொண்டேன். பேசினேன். வாதாடினேன். என்ன பேசினேன்.........எப்படிப் பேசினேன்.......எனக்கு இப்பொழுது அப்படியே சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவரைக் கதறடித்துவிட்டேன் என்பதைமட்டும் உணர்ந்து கொண்டேன். அவர் என் கரங்களைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக்கேட்டார்.

“நாம் இருவரும் ‘சேரக்கூடாத இருமுனைகள்” என்றார் அவர்.

“ஏன்......?” என்றேன் சற்றுக் கடுமையாக.

“பத்மா, வளைந்த வானத்தின் அடியிலே நிற்கிற உன்னை நான் அடைந்ததால்கண்டபலன் திருட்டு வாழ்க்கை”

அவர் பேசினார்.

இனிக் காலங்கடத்தி என்ன பயன்? நான் சொல்ல நினைத்ததையெல்லாம் சொல்லிவிட்டேன். அவர் குறுக்கிட்டு எதையும் சொல்லவில்லை.

படியாத மக்களுக்கும் படித்த மக்களுக்கும் அறிவியல் பகுதியில் வேற்றுமை யிருக்கிறது என்பதைக் காட்டவேண்டும். பாமரர் செய்யும் செயல்களையே அறிவாளிகளும் செய்தால் நாடு உருப்படுமா? மாடு வயலில் புகுந்து மேய்கிறது. அதற்கு நிலம் யாருடையது என்ற சிந்தனையும் கிடையாது. பயிர் பாழாகிறதே என்ற புத்தியும் வருவதில்லை. மனிதனும் அப்படியா? பொன்னியோடு அவர் உறவாடியதில் தவறு கண்டுபிடிக்கவில்லை அவரது மனதிற்கிசைந்த மங்கையோடு வாழ்வதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் என்னை மணந்திருக்கவேண்டிய அவசியமில்லை. என்னை என் தாய் கண்ணீரால் கறைப்படுத்திவிட்டாள். ஆனால் பலஹீனம் அத்தனையும் சேர்த்து வடித்தெடுத்த சிலைதான் பெண் என்பதை அவர் உணரவேண்டும். அவர் எல்லா உரிமைகளையும் அனுபவிக்கிற ஆண். அதட்டிய தந்தையிடம் எடுத்துக் கூறியிருக்கலாம். பொன்னியை ‘வைப்பா’க வைத்துக்கொள்ள சம்மதித்து ஆலோசனை வழங்கிய தந்தையார் மறுக்கமாட்டார். அவருக்கு வள்ளுவரை நினைவுறுத்தினேன். அவர் அச்சத்தைப்பற்றி அழகாகக் கூறியிருக்கிறார். எந்த இடத்தில் அச்சம் தலைகாட்டலாம், எங்கு தலைகாட்டக் கூடாது என்று விரிவாகச் சொல்லிவிட்டார் இரண்டடி குறளிலே. அஞ்சுவதஞ்சாமை பேதைமை, அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில்......எவ்வளவு கருத்தடங்கிய பொன்வரிகள்! உலகில் அஞ்சி நடக்கவேண்டிய நிகழ்ச்சிகள் எனசில இருக்கின்றன. சிலவற்றிற்கு அஞ்சவே கூடாது. இந்த இரண்டு வகையை உணர்ந்து நடக்கவேண்டும். பார்த்திபன் தந்தையாரைத் திருப்திப் படுத்த ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்தார் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள மற்றொரு பெண்ணின் வாழ்க்கையைச் சூதாட்டக் காயாக வைத்து விளையாடுகிறார். இதை ஒரு பெண் சம்மதிக்க முடியுமா?

(தொடரும்)

"தேனி" கண்டனம்

நல்ல தீர்ப்பு தேவை!

மதுரைக்கு அடுத்துள்ள தேனியில் நடந்துள்ள கலவரம்பற்றிய செய்தி அறிந்து நாம்மிகவும் வருந்துகிறோம். தி. மு. கழகத்தார் ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் காங்கிரஸ்காரர்கள் கலவரம் செய்திருப்பதாகத் தெரிகிறது. இதனால் அடிதடியும் கல்லெறியும் நடந்து கூட்டம் போலீசாரால் கலைக்கப்பட்டிருக்கிறது. கூட்டம் கூடித் தங்கள் கருத்து வெளியிட்டுப்பேசுவதற்கும் எழுத்தில் வெளியிடுவதற்கும் இந்திய அரசியல் திட்டம், இந்திய மக்கள் அனைவருக்கும் உரிமை வழங்கியிருக்கிறது.

தேனியில் தி. மு. கழகத்தார் நடத்திய கூட்டத்துக்குப் பிறகு, அதே இடத்தில் காங்கிரஸ் கூட்டம் ஒன்று நடைபெறும் நிலையிலும், அதில் பலர் பங்கு எடுத்துக் கொள்ளும் வகையிலுமாக ஏற்பாடு இருந்திருக்கிறது என்று நாம் அறிகிறோம். அடுத்து ஒரு கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியார், தி. மு. கழகக் கொள்கைகளையும், திட்டங்களையும் கண்டித்து மக்களுக்கு விளக்கிக்கூற வாய்ப்பு இருந்தும்கூட தி. மு. க. கூட்டத்தைக் கலைக்க முயன்றிருப்பது காங்கிரஸ்காரரின் பெருந்தன்மைக்கும், கொள்கைக்கும் ஏற்புடைத்தல்ல.

தேனியில் கலவரம்நடந்த அன்று நடக்கவிருந்த காங்கிரஸ் கூட்டத்துக்கு உள்ளூர் காங்கிரஸ்கமிட்டித் தலைவர் அனுமதியோ, அல்லது அக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியில் சம்மதமோ இருந்ததாகத் தெரியவில்லை என்று கூறப்படுகிறது. இவ்வித நிலையில் எதிர்ப்புக்கூட்டம் கூட்ட நினைத்த காங்கிரஸ்காரர்களில் சிலர் அவர்கள் பின்பற்றுவதாகச் சொல்லும் ஸ்தாபனத்தின் பெருமையை மங்கவைக்கும் முறையில் நடந்துகொண்டதாகத் தெரிகிறது. காங்கிரஸ்கட்சி அதிகாரத்தை நடத்தும் கட்சி. கூட்டத்தில் பேசுவோர், சட்டத்துக்கு விரோதமாகவோ, அமைதியைக் குலைக்கும் முறையிலோ நடந்து கொண்டால் அவர்கள் காங்கிரஸ்காரர்களாயினும் சரி; மாற்றுக்கட்சிகாரர்களாயினும் சரி; சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளக்கூடிய அதிகாரத்தைக் காங்கிரஸ் கட்சி கையில் வைத்துக்கொண்டிருக்கும்போது, ஒரு சில தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் கூட்டங்களில் குழப்பங்களை உண்டாக்குவதோடு, அமைதிக்குறைவோடுநடப்பதோ குற்றமுடையது. இது எல்லாக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

தேனிக் கலவரத்தில் போலீஸ் எச்சரிக்கையாக இருந்து, நிலைமையைத் துப்பாக்கிப் பிரயோகம் இல்லாமல் சமாளித்திருப்பதாகத் தெரிகிறது. மேலும் அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல், இருகட்சியையும் சேர்ந்த பலரைப்பிடித்துக்காவலில் வைத்தும் இருக்கின்றனர். இவர்களில் காங்கிரஸ்பிரமுகர்களும் செல்வாக்குடையவருமான இரண்டு காங்கிரஸ்காரர்கள் இடம்பெற்றிருந்திருக்கிறார்கள், எந்தக் கலவரத்தையும் முன்ஏற்பாடாகத் தடுக்க வேண்டுமானால், கலவரம் அல்லது அமைதிக்குறைவு வரக்கூடும்என்று தெரியும் கூட்டத்தவரின் தலைவர்களையும் முக்கிய தொண்டர்களையும் தற்காலிகமாகத் தடுத்துக்காவலில் வைப்பது உலகெங்கும் இருந்து வரும் முறையாகும். நாளைக்கு அதிகாரத்துக்கு வரும் மாற்றுக்கட்சியார்களும்கூட, முறையே இம்மாதிரி தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவே செய்வார்கள் ஒவ்வொரு கட்சியும் அதிகாரம் ஏற்றுக்கொண்டவுடன், அது கட்சி மனோபாவத்துடன் நடக்காமல் மக்கள் எல்லோருடைய நன்மைகளையும், ஆசைகளையும் எதிரொலிக்கும் முறையிலேதான் நடந்துகொள்ளும். அவ்வித நிலையிலேதான் காங்கிரஸ் அதிகாரத்தின் கீழுள்ள போலீசார் நடந்துகொண்டிருக்கிறார்கள். காங்கிரசின் கீழுள்ள போலீசார் எல்லாச் சமயங்களிலும் நீதியும் நேர்மையும்கொண்டு நடந்திருக்கிறது என்று சொல்லமுடியாவிட்டாலுங்கூட, தேனிக் கலவரத்தைப்பொறுத்தவரையில், அவர்கள் பொறுப்புடனும், மக்கள் நலத்தை மனதிற்கொண்டும் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

பிடித்தவர்களில் காங்கிரஸ்காரர்கள், அதுவும் செல்வாக்குப் பெற்றவர்கள் இருந்தார்கள் என்பதற்காக, அவர்களுடைய காவலுக்கு காரணமாக இருந்த சப்மாஜிஸ்டிரேட், சப் இன்ஸ்பெக்டர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஹவில்தார் ஆகிய நால்வர்களையும் தற்காலிகமாகப் பதவியிலிருந்து நீக்கி. இலாகா விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது சென்னை சர்க்கார். இந்த உத்தரவும் மதுரை ஜில்லாவிலுள்ள கலெக்டரின் அறிக்கையைப் பெறுமல், சென்னையிலிருந்துபோன ஒரு போலீஸ் உயர்தர அதிகாரியின் அறிக்கையைக்கொண்டு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இது அமுலில் உள்ள நிர்வாகமுறைகளுக்கு எதிரானது என்று நாம் நினைக்கிறோம். இவ்வாறு நடந்துகொண்ட முறை பிடிக்காமல், மதுரை கலெக்டர் தம் பதவியை இராஜிநாமாச் செய்ய விரும்புதாகவும் கூடச் செய்திகள் வருகின்றன. அத்துடன் பிடிக்கப் பட்டவர்கள் உடனே விடுதலை செய்யப் பட்டும் இருக்கிறார்கள்.

ஸ்தலத்திலுள்ள போலீஸார் அமைதியையும் கலவரத்தையும் தவிர்ப்பதற்கு சில நடவடிக்கைகளை துரதிர்ஷ்டவசமாய் காங்கிரஸ் தலைவர்கள் மீது எடுத்துக் கொள்ளும்படி ஏற்பட்டதற்காக, தேனிக் கலவரத்துக்கு ஒரு சிறிதும் சம்பந்தம் இல்லாத இராமநாதபுரம் ஜில்லா போர்டு, போலீஸ் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, அதன் அதிகாரத்தை மீறிய செயலாகும். மேலும் இத் தீர்மானம், போலீஸாருக்கு பெருமை பளிக்கக் கூடியதுமல்ல. கடமையை விருப்பு, வெறுப்பில்லாமல் செய்ததற்காக, போலீஸ் மீது குற்றம் சுமத்துவது நியாயத்தைக் கேலி செய்வது போலாகும்.

தேனிக் கலவரம் சம்பந்தமாக இலாகா விசாரணை செய்யாமல், ...

பதிகளைக் கொண்ட ஒரு தனிக் குழு விசாரணை செய்யவேண்டியது அவசியமாகும். அப்பொழுது தான் உண்மை வெளிவரும்.

பிரசண்ட விகடன்.

★

கொடுமை இது!

தேனியில் நடைபெற்ற கலவரம் தமிழகத்தையே பெரிய பரபரப்புக்குள்ளாக்கிவிட்டது. காங்கிரஸ்காரர்கள் 'அடிதடி'யில் எவ்வளவு நம்பிக்கையுள்ளவர்கள் என்பதை அந்த நிகழ்ச்சி நாட்டு மக்களுக்குப் புலப்படுத்தியது, 'அகிம்சா வீரர்கள்' மாற்றுக் கட்சியினர் கூட்டத்தைக் கலைக்கப் 'போர்க்கோலம்' கொண்ட புதுமையைத்தான் தேனி, ஜூலை 4-ம் நாள் கண்டது. ஒரே நாளில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டமும் காங்கிரஸ் கூட்டமும் நடைபெற ஏற்பாடு; முன்னேற்றக் கழகக் கூட்டம் பிற்பகல் இரண்டு மணிக்குத் தொடக்கம் அதற்கு முன்னரே, காங்கிரஸ் தோழர்கள்கலகத்தை, கம்பு, தடி, கல் சகிதம் 'அங்குரார்ப்பணம்' செய்து விட்டார்கள்; கூடியிருந்த பொது மக்களையும் கழகத் தோழர்களையும் இந்தப்'படைக்கலங்களால்' தாக்க முனைந்து விட்டார்கள் பலருக்குக் காயம்; ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். இந்தக் கலவரத்திற்குக் காரணமானவர்களென மதுரை ஜில்லா போர்டு தலைவர் தோழர் தியாகராசன் உட்பட 133 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர்கள். தோழர் தியாகராசன் முன்னிலையில்தான் இத்தனை 'அலங்கோலமும்' அரங்கேற்றப்பட்டிருக்கிறது. இந்த அலங்கோலத்தால் அல்லற்பட்டவர்கள்முன்னேற்றக் கழகத்தாரும் பொது மக்களும் இத்தகைய 'கொடுமை'யைக்கேட்டு ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளோர் துணுக்குற்றனர்! இந்நிலையில் காமராஜர் விழிப்புணர்ச்சியும், சென்னை அரசினரின் 'விசாரணை' ஆர்வமும், கலவரத்தை அடக்க உதவிய அதிகாரிகள் மீது திரும்பியிருக்கின்றன. பெரியகுளம் சப்-மாஜிஸ்டிரேட், மற்றும் போலீஸ் அதிகாரிகள் மூவரை வேலையினின்றும் நீக்கியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்களில் 35 பேரைத் தவிர, மற்றவர்கள் மீது வழக்குத் தொடருவது அவசியமில்லையென முடிவு செய்து விட்டார்கள். மீதமுள்ள விசாரணை எப்படி முடியுமென்று நாம் கூறவேண்டியதில்லை. டில்லி பார்லிமெண்டில் நேரு பேச்சுரிமையைக் கட்டுப்படுத்தும் வகையில் திருத்தம் கொண்டுவந்து நாட்கள் அதிகம் ஆகிவிடவில்லை. அதற்குள் அவருடைய 'சிஷ்யர்கள்' இங்கே 'கற்போர்' மூலம் பேச்சுரிமையைக் கட்டுப்படுத்த முன்வந்திருக்கிறார்கள்! இந்தப் போக்கு நீடிக்காமல் பார்ப்பது 'நல்லாட்சி' நிறுவ எண்ணும் பெரியவர்களின் கடமையாகுமென்று அறிவுறுத்த விரும்புகிறோம்.

பொன்னி.

★

வெளிவந்துவிட்டது!

ரா. தனலிங்

எழுதிய

சிறந்த சிந்தனைச் சித்திரம்

பாதாள பைரவி

விலை 0—12—0

தனலின் இதர நூல்கள்

கானகத்திலே காதல்	1—12—0
அந்த இரவு	0—8—0
காதலோ காதல்	0—8—0
நடிகன்	0—8—0
தாய்	0—4—0
ஆள்வோர் யார்?	0—4—0

கழிவு 25% செலவு இனம்

தேவைக்கு எழுதுக

இராஜன் பதிப்பகம்,

(A.) மேட்டுப்பாளையம், திருச்சி Dt.

★ மாநில மாநாடு ★

※ மாநில மாநாட்டுக்கான நன்கொடை ரசீதுகள் தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்பட்டு விட்டன.

※ அவைகளைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு மாவட்ட செயற் குழுவினரும் நன்கொடை வசூலிக்கும் ஆக்க வேலைகளில் இறங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

※ அடிக்கடி, மாநாடு சம்பந்தமாக கழக முன்னணி வீரர்கள் தங்கள் தங்கள் ஆலோசனைகளை நமக்கு அனுப்பிக் கொண்டுள்ளனர்.

※ மாநாட்டில் கண்காட்சி வைப்பது சம்பந்தமாக சென்னையில் பல தகவல்கள் நமது நண்பர்களால் சேகரிக்கப்பட்டுக் கொண்டுள்ளன.

※ மாநில மாநாட்டுக்கென, திண்டிவனம் சமூக சீர்திருத்த மாநாடு, திருப்பத்தூர் பேச்சுரிமை—எழுத்துரிமை மாநாடு, திண்டுக்கல் பே. எ. உரிமை மாநாடு ஆகியவைகள் மூலம் கீழ்க்காணும் தொகை கிடைத்துள்ளது.

திண்டிவனம் ரூ. 500 திருப்பத்தூர் ரூ. 1000

திண்டுக்கல் ரூ. 1000

Edited, Printed & Published by C. N. Annadurai M A at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.